உ

சிவமயம்

# கனடா-காரை கலாச்சார மன்றம்

## தமிழ்மொழித் திறன், பண்ணிசைப் போட்டி - 2019

## எழுத்து

### உயர் பிரிவு (தரம்10,11,12)

எழுதுவதற்கு பென்சில், தாள், அழிறப்பர் என்பன மண்டபத்தில் வழங்கப்படும்.

பங்குபற்றும் மாணவர்கள் தரப்பட்ட விடயங்களை முழுமையாக எழுத ஆயத்தமாக வரல் வேண்டும்.

நடுவர்கள் கூறும் வசனங்களை மட்டும் பந்தி பந்தியாக எழுதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளின் எழுத்துக்கள் தெளிவாகவும் உறுப்பாகவும் இருத்தல் அவசியமானது.

**பரதன்**

கோசல நாட்டின் தலைநகராக விளங்கும் அயோத்தியை தசரத மன்னன் ஆண்டு வந்தான். தசரதனுக்கு கோசலை, கைகேயி, சுமித்திரை என்னும் மூன்று மனைவியர் இருந்தனர். கைகேயிற்கு மகனாக பரதன் பிறந்தான். பரதன் கல்வியிலும், வில் வித்தையிலும் சிறந்து விளங்கினான். இராமனது முடிசூட்டலை மந்தரை என்பவள் கைகேயின் மனதை மாற்றி இராமன் பதினான்கு ஆண்டுகள் காடாள வேண்டும் என்றும் பரதன் நாடாள வேண்டும் என்றும் இரு வரங்களையும் தசரதனிடம் இருந்து பெற்றுக்கொண்டாள்.

தனது தாயின் சூழ்ச்சியால் யாவும் நடந்தன என்பதை அறிந்து பரதன் கோபமும், வேதனையும் அடைந்தான். அண்ணன் இருக்கத் தம்பி அரசாள்வதா என மறுத்துவிட்டு, அண்ணனை அழைத்து வந்து

முடிசூட்டுவேன் என்று கோசலையிடம கேட்டுவிட்டு காட்டிற்குப் புறப்பட்டான். பரதன் பரிவாரத்துடன் இராமன் இருந்த வனத்தை நோக்கிப் புறப்பட்டான். பரதன் இராமன் இருந்த இடத்தை அடைந்தான். இராமன் காலடியில் விழுந்து விம்மி விம்மி அழுதான். அண்ணா நீ அயோத்திக்கு வந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும் என கால்களில் வீழ்ந்து வணங்கினான். பரதன் இராமனின் சொற்படி தனது பாதுகைகளை அன்புடன் பெற்று தலைமேல் வைத்துக்கொண்டு அயோத்தியை நோக்கித் திரும்பினான்.